# KOVAI MEDICAL CENTER AND HOSPITAL LIMITED

99, AVANASHI ROAD, COIMBATORE-641 014

## 34th ANNUAL GENERAL MEETING 2019 - 20
## CHAIRMAN'S SPEECH

**Through Video Conferencing / Other Audio Visual Means**

**Date: September 19, 2020**
**Time: 4.00 pm (IST)**

**Respected Shareholders of KMCH,**

I am glad to welcome you all! I extend my greetings to you along with my fellow KMCH Directors. You have been provided with a copy of the Annual Report of KMCH. I presume you have all gone through them.

KMCH Institute of Health Sciences and Research, which has become a part of KMCH, is the fifth medical college in this region and the college has been given approval by the Medical Council of India to start the second year. It is affiliated to Dr.MGR Medical University started initially with 150 students. It was inaugurated by Dr.R.V.Ramani, a Member of the Board of Governors of the Medical Council of India. It has been our dream to set up a world class educational and research institution in Coimbatore to ensure quality medical education that is on par with the best centers across the globe. Along with the KMCH Directors, and you, the Shareholders, let me assure that we will take the Medical Education Center to new heights.

Total Revenue for 2019-20 is Rs.722 crores, which, compared to Previous year 2018-19, is 13% more and Profit After Tax is Rs.95 crores.

We are trying to economize on the consumption of energy and consistent efforts will be made to utilize efficiently all the resources at our disposal.

We already have a 4 MW Solar plant in place and during the year, we added another 1.25 MW Solar Plant. Together they meet 69% of the hospital's energy needs, resulting in 44% saving on the expenditure on energy. Through an Energy Management system, Energy consumption is monitored, areas of higher consumption identified and steps taken to enhance energy efficiency; these include use of equipment with 5-star rating, installation of sensors in patients' bathrooms (now lights are manually operated), operation of centralized A/c, and replacement of bulbs with LEDs.

The hospital has improved the standard of its Intensive Care Unit (ICU) proving that it is a pioneer in offering intensive care. Also, this is the only Intensive Care Unit in South India to be recognized for the Fellowship Program, a recognition that we have got at the national level. And the fact that the Unit has been recognized for a post-doctoral program in Interventional Radiology by the National Council in New Delhi is a feather in our cap.

KMCH conducted the 3rd International Conference on Endocrinology. The Dept of Endocrinology is a pioneer in offering world class service. It has also done a detailed research on diabetes and published quality research papers in medical journals at the global level. Joining hands with the Rotary Club of Coimbatore Central, KMCH helps poor underprivileged children suffering from insulin-dependent diabetes under a project named Project Kathir, a Ray of Hope. We offer support to several children providing them with life-saving insulin treatment, consumables and insulin pumps.

By a technique called Kidney Sharing, three related donors and three recipients were simultaneously operated on, where the three donors' kidneys were shared among the three relatives in such a way that the best match was given to each patient. This is again the first feat to be performed in the country considering the complexity of simultaneously operating on six patients; all the patients are doing well.

The Department of Radiation Oncology organized a National Young Radiation Oncology Conference 2020 (YROC 2020). With radiotherapy treatment becoming an indispensable tool in our fight against cancer, the theme for this national meeting was to prepare the next generation of budding radiation oncologists for the inevitable technological advancements for the decades ahead. The Conference saw active and enthusiastic participation from leading medical professionals and delegates from all over India numbering more than 150. Many international and national faculties contributed to knowledge sharing in this conference.

The hospital continues to receive several awards, all of which testify to the fact that KMCH not only takes care of patients to the best of its abilities, but also remains a role model in the industry. Notable among the many awards won by KMCH is the "Best Multi Specialty Hospital in South India – 2020" from "The Economic Times".

The success of KMCH has always been due to its teamwork. I wish to express my gratitude and appreciation for all the hard work my team members have put in to achieve this level of service to all. I seek their continued support, and together we can deliver value to all the stakeholders, patients, shareholders and the community we serve.

Our Directors have paved the way to manage the hospital very efficiently taking into consideration all kinds of situations, our Shareholders too are supportive and are greatly interested in our hospital's growth.

Our thanks to Indian Bank and Indian Overseas Bank for their extensive support for our growth. Also, our Auditors and Accountants have been of great help. And those who supply us with our daily needs are also very important. It is with the help of all of them that our hospital has been able to achieve sustained growth. It is with their help we have started our medical college and the first-year classes of our medical college are being conducted online during Covid-19 times. Along with our Directors I express my thanks to all of them. All the staff in the hospital are working tirelessly.

On behalf of the Management and with your support, we have fulfilled our social responsibility by making contribution to the Relief Fund to help those affected by Covid-19. Our doctors and nurses are doing their best by serving day and night. Our sincere thanks to them.

2020-21 will be a tough year due to the COVID-19 pandemic. Let us hope that we will succeed as we participate jointly with others in the fight against the Coronavirus and get over the current difficult situation.

Stay safe and healthy!

Thanks and Warm Regards,

**Dr. Thavamani Devi Palaniswami**
***Joint Managing Director***

**கோவை மருத்துவ மையம் மற்றும் மருத்துவமனை லிமிடெட்**
99, அவினாசி சாலை, கோயம்புத்தூர் - 641 014

# 34-வது ஆண்டு பொதுப்பேரவைக்கூட்டம் 2019-20

## தலைவர் உரை

நிகழ்வு முறை: வீடியோ கான்பரன்சிங் / ஆடியோ விசுவால் மூலமாக | நாள் : செப்டம்பர் 19, 2020
நேரம் : மாலை 4 மணி (IST)

பெருமதிப்பிற்குரிய கோவை மருத்துவமைய பங்குதாரர்களே,

அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த வணக்கங்கள். மருத்துவமைய இயக்குநர்களும் நானும் வாழ்த்துக்களை சொல்லிக் கொள்கிறோம். உங்களுக்கு இயக்குனர்களின் ஆண்டு அறிக்கைகளும் தணிக்கையாளர்களின் தணிக்கை செய்யப்பட்ட கோவை மருத்துவமையத்தின் கணக்குகளும் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளை தாங்கள் படித்து இருப்பீர்கள் என எடுத்துக்கொள்கின்றோம்.

கோவை மருத்துவ மையம் மற்றும் மருத்துவமனையின் ஒரு அங்கமான கேஎம்சிஎச் மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி கல்லூரி (KMCH Institute of Health Sciences and Research) இந்தப் பகுதியில் ஐந்தாவது மருத்துவக் கல்லூரியாகும். நமது மருத்துவ கல்லூரிக்கு இரண்டாம் ஆண்டுக்கான இந்திய மருத்துவக் கழகத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இது தமிழ்நாடு எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் கீழ் 150 மாணவர்களுடன் தொடங்கப்பட்டது. இது இந்திய மருத்துவக் கழக ஆளுமைக் குழுவின் உறுப்பினரான டாக்டர் ஆர்.வி.ரமணி அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. உலக அளவிலான மருத்துவக் கல்லூரிகளுக்கு இணையாக தரமான கல்வியை வழங்கும் ஒரு மருத்துவ மற்றும் ஆராய்ச்சி கல்லூரியை கோவையில் துவங்கவேண்டும் என்பது எங்களது நீண்டகாலக் கனவாகும். நானும் நமது மருத்துவமைய இயக்குநர்களும், மருத்துவமைய பங்குதாரர்களும் நமது மருத்துவமையத்தை இன்னும் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வோம் என்று இத்தருணத்தில் கூறிக்கொள்கிறோம்.

2019-20 ஆம் ஆண்டு வருமானம் ரூபாய் 722 கோடி ஆகும். முந்தைய ஆண்டு 2018-19 உடன் ஒப்பிடும்போது 13 சதவிகிதம் அதிகம். லாபம் ரூபாய் 95 கோடி ஆகும்.

எரிசக்தி சேவையை குறைவாகப் பயன்படுத்துவதன் மூலம் ஆற்றல் நுகர்வு குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உங்கள் நிறுவனம் தொடர்ச்சியாக வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

தற்போதுள்ள 4 மெகா வாட் சூரிய ஆலையுடன் கூடுதலாக 1.25 மெகா வாட் சூரிய ஆலை நிறுவப்பட்டுள்ளது. இது நமது மருத்துவமனையின் மின்சார தேவையில் 69 சதவிகிதத்தை பூர்த்தி செய்கிறது. இதனால் நமது மின்சார கட்டணங்களின் சேமிப்பு 44 சதவிகிதம் ஆகும். ஆற்றல் மேலாண்மை அமைப்பு மூலம் ஆற்றல் நுகர்வு கண்காணிக்கப்படுகிறது. இந்த அமைப்பின் மூலம், அதிக அளவு மின்சாரம் பயன்படுத்தும் பகுதிகள் கண்காணிக்கப்பட்டு, ஆற்றல் பயன்பாட்டை மேம்படுத்த மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

5 நட்சத்திர மதிப்பீடுகளுடன் கூடிய உபகரணங்களைப் பயன்படுத்துதல், நோயாளி அறைகளின் குளியலறையில் இயக்கம் சென்சார்களைப் பயன்படுத்துதல் (விளக்குகள் மனித இயக்கத்தின் அடிப்படையில் இயக்கப்படுகின்றன), மையப்படுத்தப்பட்ட ஏ / சி ஆலையை இயக்குதல் மற்றும் எல்.ஈ.டி உடன் குழாய் விளக்குகளை வெளியேற்றுவது ஆகியவை அடங்கும்.

தீவிர சிகிச்சையளிப்பதில் (ICU)  முன்னோடி என்பதை நிரூபிக்கும் வண்ணம் கேஎம்சிஎச் தனது தீவிர சிகிச்சைப் பிரிவின் தரத்தை 2020-ல் மேலும் உயர்த்தியுள்ளது. தென்னிந்தியாவிலேயே ஆராய்ச்சிப் படிப்புகளுக்காக (Fellowship) அங்கீகரிக்கப்பட்ட ஒரே தீவிர சிகிச்சைப் பிரிவு இதுவேயாகும். இதற்கு இந்த மையம் பெற்றிருக்கும் தேசிய அளவிலான அங்கீகாரம் ஓர் அடையாளம். புது டில்லியிலுள்ள தேசியக் கழகம் கதிரியக்க ஊடுசிகிச்சையில் முதன்முதலான மேல்ஆராய்ச்சிப் பட்டப் படிப்புக்காக (Post-doctoral Program in Interventional Radiology) இந்தத் துறையை தேர்ந்தெடுத்துள்ளது இத்துறைக்கு மேலும் பெருமை சேர்க்கிறது.

கேஎம்சிஎச் நாளமில்லா சுரப்பி மருத்துவம் குறித்து மூன்றாவது உலக மாநாட்டை நடத்தியது. தனது சிறப்புத் துறையின் மூலம் உலகத்தர சேவையை வழங்குவதில் நாளமில்லா சுரப்பித்துறை முன்னோடியாக இருப்பதுடன், நீரிழிவு நோய் குறித்த விரிவான ஆராய்ச்சிகள் செய்து உலக அளவிலான மருத்துவ இதழ்களில் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளது. வசதியற்ற இன்சுலின் சார்ந்திருக்கும் ஏழை நீரிழிவு நோயாளிக் குழந்தைகளுக்கு உதவும்  ப்ரோஜக்ட் கதிர், நம்பிக்கையொளி எனும் திட்டத்தை நடத்தும் கோவை மத்திய ரோட்டரி சங்கத்தோடு கேஎம்சிஎச்-ம் கைகோர்த்துக்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பல குழந்தைகள் பலன் பெற்றிருக்கின்றனர்; அவர்களுக்கு இன்சுலின் உயிர்காக்கும் சிகிச்சையுடன், இன்சுலின் பம்ப், மற்றும் பிற கருவிகளும் வழங்கப்படுகின்றன.

சிறுநீரகப் பகிர்வு என்ற முறையில், மூன்று கொடையாளர்கள் மூன்று பெறுநர்களுக்கு சிறுநீரக தானம் செய்தனர்; கொடையாளர்களின் உறவினருக்கு அல்லாமல் நன்கு பொருந்தும் உறவினரல்லாத மற்ற பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட சிறுநீரகம் பொருத்தப்பட்டது. இது நாட்டிலேயே முதன்முதலாக நிகழ்த்தப்பட்ட சாதனையாகும்; சிக்கலான இந்த அறுவைச் சிகிச்சை ஒரே நேரத்தில் ஆறு பேருக்கு நடத்தப்பட்டது; அனைவரும் நன்கு தேறிவருகின்றனர்.

புற்றுநோய் கதிரியக்க சிகிச்சைத் துறை தேசிய இளம் புற்றுநோய் கதிரியக்க மாநாடு 2020 (YROC 2020) நடத்தியது. புற்றுநோய்க்கு எதிரான போரில் கதிரியக்க சிகிச்சை இன்றியமையாத ஒன்றாகிவிட்ட நிலையில், இந்த மாநாட்டின் நோக்கம் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் தவிர்க்கவியலாத தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு அடுத்த தலைமுறை புற்றுநோய் கதிரியக்கச் சிகிச்சை மருத்துவர்களை தயார்படுத்துவதாக இருந்தது. இம்மாநாட்டில் நாடெங்கிலும் இருந்து 150க்கும் மேற்பட்ட மருத்துவர்களும், பிரதிநிதிகளும் உற்சாகத்துடன் கலந்துகொண்டார்கள்.

இந்த மருத்துவமனை தொடர்ந்து பல விருதுகளைப் பெற்றுக்கொண்டு இருக்கிறது; இது கேஎம்சிஎச் நோயாளிகளை கவனிப்பதில் மட்டுமல்லாமல், மருத்துவத் தொழிலில் முன்மாதிரியாக விளங்குகிறது என்பதையும் காட்டுகிறது. கேஎம்சிஎச் பெற்ற பல விருதுகளில் குறிப்பிடத்தக்க ஒன்று என்றால், அது "The Economic Times" நாளிதழ் வழங்கிய தென்னிந்தியாவிலேயே சிறந்த பன்சிறப்பு மருத்துவமனை-2020 என்கிற விருதாகும்.

கேஎம்சிஎச்-ன் வெற்றி எப்போதுமே அதன் கூட்டுப்பணியில்தான் இருக்கிறது. அனைவருக்கும் இத்தகைய சேவையை வழங்க கடுமையாக உழைக்கும் மருத்துவக் குழுவுக்கு எனது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களது தொடர்ந்த ஆதரவை நான் நாடுகிறேன்; அனைவரும் இணைந்து நோயாளிகள், பங்குதாரர்கள், நாம் பணியாற்றும் சமூகம் ஆகிய அனைவருக்கும் அளிக்கும் சேவையை மேலும் சிறப்பானதாக்குவோம்!

எல்லா சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு நமது மருத்துவமனை இயக்குநர்கள் நமது மருத்துவமனையை திறம்பட நடத்த வழிவகுத்துக் கொடுத்துள்ளார்கள். நமது பங்குதாரர்கள் நமது மருத்துவமனையின் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாகவும் அதன் வளர்ச்சியில் அக்கறை கொண்டும் இருக்கிறார்கள். அவர்களுக்கு நானும், இயக்குநர்களும் நன்றியும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். நமது மருத்துவமனையைச் சேர்ந்த அத்தனை பேரும் நமது மருத்துவமனைக்காக அயராது உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நமது வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ள இந்தியன் வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிகளுக்கு நம்முடைய நன்றிகள். நமது தணிக்கையாளர்கள், கணக்காளர்கள் நமக்குப் பெரிய உதவியாக இருக்கிறார்கள். நமது அன்றாடத் தேவைக்கு பொருள் கொடுப்பவர்கள் முக்கியமானவர்கள். இத்துனை பேர்களின் ஒத்துழைப்பின் காரணமாக நமது மருத்துவமனை மேலும் மேலும் வளர்ந்து கொண்டு இருக்கிறது. இப்பொழுது ஒரு மருத்துவக் கல்லூரியை தொடங்கும் அளவிற்கு வளர்ந்து இருக்கின்றது. நமது மருத்துவக்கல்லூரியில் முதலாம் ஆண்டு நிகழ்நிலை (online) வகுப்புகள் நடந்து கொண்டு இருக்கின்றன.

நிர்வாகத்தின் சார்பாகவும், உங்கள் ஆதரவோடும் கோவிட் -19 நிவாரண நிதிக்கு நன்கொடை அளித்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகள் செய்தும் நமது பங்களிப்பை சமூகத்திற்கு செய்துள்ளோம். நமது மருத்துவர்களும், செவிலியர்களும் இரவு பகல் பாராது தங்களது பங்களிப்பை கொடுத்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

கோவிட்-19 தொற்றின் காரணமாக 2020-21-ஆம் ஆண்டு மிகவும் கடுமையானதாக இருக்கும். இந்த சிக்கலான சூழலிலிருந்து விடுபட அனைவருடனும் இணைந்து கொரோனாவுக்கு எதிராக போராடி வெற்றி பெறுவோம் என நம்புவோம்!

இந்த கூட்டத்தில் பங்கேற்கும் பங்குதாரர்கள் மற்றும் எல்லோருக்கும் நம் இயக்குநர்களும் நானும் நன்றிகளையும் வணக்கத்தையும் சொல்லிக்கொள்கின்றோம்.

அனைவரும் பாதுகாப்பாக, நலமாக இருக்க எங்களுடைய வாழ்த்துக்கள்.

நன்றி.

டாக்டர் தவமணி தேவி பழனிசாமி
கூட்டு நிர்வாக இயக்குநர்